## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் கலந்தாய்வு நடைமுறைகள்

- இணையவழி கலந்தாய்வு 26.11.20, 27.11.20, 28.11.20 ஆகிய நாட்களில் நடைபெறும்.
- கலந்தாய்விற்கு தேர்வு செய்யப்பட்ட மாணவர்களுக்கு குறுஞ்செய்தி (SMS) மற்றும் மின்னஞ்சல் மூலம் தகவல் தெரிவிக்கப்படும்.
- இவ்வாறு தகவல் கிடைக்கப்பட்டவர்கள் https://tnauonline.in என்ற இணையதளத்தில் தங்களுடைய பயனீட்டாளர் பெயர் மற்றும் கடவுச் சொல்லை பயன்படுத்தி கலந்தாய்வு கட்டணம் ரூ.3000/- (OC,BC, BCM and MBC) /ரூ.1500/- (SC,SCA and ST) செலுத்த வேண்டும்.
- கலந்தாய்வு கட்டணம் செலுத்திய மாணவர்கள் தங்களுடைய கல்லூரி மற்றும் பாடப்பிரிவை மறுதேர்வு செய்யலாம். இதை 26.11.20, 27.11.20, 28.11.20 மூன்று நாட்களும் எவ்வளவு முறை வேண்டுமானாலும் செய்யலாம்.
- ஒவ்வொரு முறை கல்லூரி மற்றும் பாடப்பிரிவிற்கான விருப்ப தேர்வை செய்தவுடன் அதை save செய்யவேண்டும். விருப்ப தேர்வை முடித்தவுடன் submit preference பொத்தானை அழுத்தி விருப்ப தேர்வை உறுதி செய்ய வேண்டும். மாணவர்கள் submit preference உறுதி செய்தபின் மீண்டும் விருப்பத்தேர்வை மாற்ற இயலாது.
- இந்த மூன்று நாட்களில் விருப்ப தேர்வை மாற்றவில்லை எனில் விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்ட தேர்வை இறுதியானதாக எடுத்து கொள்ளப்படும்.
- இதற்கான முடிவுகள் 2.12.2020 அன்று இணையதளம் வாயிலாக தெரிவிக்கப்படும். இம்முடிவுகளை https://tnauonline.in என்ற இணையதளத்தில் தங்களுடைய பயனீட்டாளர் பெயர் மற்றும் கடவுச் சொல்லை பயன்படுத்தி தெரிந்து கொள்ள வேண்டும்.
- கல்லூரி மற்றும் பாடப்பிரிவு ஒதுக்கப்பட்ட மாணவர்கள் இணையதள வாயிலாக ரூ.20,000/- செலுத்தி தங்களுடைய இடஒதுக்கீட்டு ஆணையை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
- இவர்களுக்கான அசல் சான்றிதழ் சரிபார்ப்பு தேதி மற்றும் நேரம் குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சல் மூலம் தெரிவிக்கப்படும்.
- அந்த நாளில் மாணவர்கள் அசல் சான்றிதழ்களுடன் குறிப்பிட்ட நேரம் மற்றும் நாட்களில் கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு நேரில் வந்து சமர்ப்பிக்கவேண்டும்.
- சான்றிதழ் சரிபார்ப்பிற்கு பின் தற்காலிக இடஒதுக்கீட்டு ஆணை வழங்கப்படும்.
- இடஒதுக்கீடு பெற்ற மாணவர்கள் தங்களுடைய விருப்பத் தேர்வினை மாற்றி அமைத்து கொள்ள நகர்வு முறைக்கான (Sliding) விருப்பத்தினை பதிவு செய்ய வேண்டும்.
- நகர்வு முறை மாணவர்களுடைய விருப்பத் தேர்வில் ஏற்கனவே கிடைக்கப் பெற்ற தேர்விற்கு மேல் நோக்கியே நகரும்.
- கலந்தாய்வில் கலந்து கொள்ளும் அனைத்து மாணவர்களுக்கும் கல்லூரி மற்றும் பாடப்பிரிவு ஒதுக்கப்படும் என்பதற்கு உத்தரவாதம் இல்லை.
- இடம் ஒதுக்கப்படாத மாணவர்கள் அடுத்தடுத்த கலந்தாய்வில் பரிசீலனைக்கு எடுத்து கொள்ளப்படுவார்கள்.